**தலைப்பு 291 – கடலோர பாதுகாப்பு மற்றும் கடலோர வள முகாமைத்துவத் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2017 ஆம் ஆண்டு**

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்த) சட்டத்தினால் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது அட்டவணையிலும் மூன்றாவது அட்டவணையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்பு மற்றும் விடய இலக்கம் என்பவற்றின் கீழ் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்று, கடலோர பாதுகாப்பு மற்றும் கடலோர வள முகாமைத்துவத் திணைக்களத்தினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டன. அக் கணக்குகளிலிருந்தும் இணக்கக் கூற்றுக்களில் இருந்தும் நிரூபணமாகும் நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

**1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்களித்தன்மை தொடர்பான பொறுப்பு**

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளின் மேற்பார்வை தொடர்பாக பொது அதிகாரமும் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். நிதிப்பிரமாணம் 125(1)(அ) பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமான கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியினால் நியமிக்கப்பட்டுள்ளது. பாராளுமன்றத்தினால் விதிக்கப்படும் வரையரைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிருவாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.3 கணக்காய்வு நோக்கெல்லை**

தலைப்பு 291 – கடலோர பாதுகாப்பு மற்றும் கடலோர வள முகாமைத்துவத் திணைக்களத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு உரிய தரப்பினருக்கு செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018 அக்தோபர் 30 ஆந் திகதி பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் அறிக்கைகள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால்

பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

-----------------------------------------------------------

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக கடலோர பாதுகாப்பு மற்றும் கடலோர வள முகாமைத்துவத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது கண்டறியப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளன. அந்த அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.9 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மையினை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசின் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 128 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளை நிறைவேற்றும் போது கண்டறியப்பட்ட பின்வரும் குறிப்பில் பொழிப்பாக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்பட கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிதன்மையை திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

| **நிதிப்பிரமாணம் 128(1) கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களித்தன்மை** | | **கணக்கீட்டு உத்தியோகத்தர் அந்த ஏற்பாடுகளுடன் இணங்காதிருந்தமை** | **அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்தியுடனான தொடர்பு** |
|---|---|---|---|
| நிதிப் பிரமாணம் | | | |
| 128(1)(அ) | அரசினால் நிர்ணயிக்கப்பட்டு குறிப்பிடப்பட்டுள்ள கொள்கை மற்றும் அதிகாரம் வழங்கப்படும் நடவடிக்கைகளுக்காக நிதி ஏற்பாடு செய்து கொடுப்பதில் பாராளுமன்றத்தின் சவால்களை கவனத்திற்கொண்டு தமது திணைக்களத்தின் நடவடிக்கைகள் வெளிப்படை தன்மையுடன் திட்டமிடப்பட்டு செயற்படுத்துவதாகவும் நடப்பாண்டிற்கான நிர்ணயிக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களை பூர்த்தி செய்வதற்கும் அல்லது நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை நிறைவேற்றுவதற்கு முயற்சி எடுத்தல். | 1. பாதீட்டு மதிப்பீடு நடைமுறை சாத்தியமாக தயாரித்திருக்காமை | 2.5 |
| | | 2. பிரதான செயற்பாடுகளுக்கு முரணான செயற்பாடுகள் | 2.1(அ) |
| | | 3. செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யாது கைவிடல் | 2.1(ஆ) |
| | | 4. பெறுகை செயற்பாடுகளை செயற்படுத்துவதில் குறைபாடுகள் | 2.2 |
| 128(1)(இ) | நிதிப்பிரமாணங்கள் மற்றும் அரச ஏனைய மேலதிக ஏற்பாடுகள் தமது திணைக்களத்தினால் கடைபிடிக்கப்படுவதாகவும் மற்றும் தேவையான சந்தர்ப்பங்களில் அவற்றிற்கு மேலதிகமாக திணைக்கள ஏற்பாடுகள் வழங்குவதாகவும், | இணக்கமின்மைகள் | 2.8 |

| | | | |
|---|---|---|---|
| 128(1)(ஏ) | நிலுவையாகவுள்ள கட்டண ங்கள் ஆகியவற்றை அறவீடு செய்வதற்கு விஷேட ஏற்பாடுகள் மேற்கொள்வ தெனவும் அந்த கருமம் சாட்டப்பட்டிருந்த உத்தியோகத்தவர்களினால் நிலுவை பணம் தொடர்பாக அவற்றை அறவீடு செய்தவை விரைவு படுத்துவதற்காக எடுக்கப்பட்ட கட்டங்கள் தொடர்பாக குறைந்தளவு மூன்று மாதங்களுக்கு ஒரு முறை அல்லது வேறு முறையில் கட்டளையிட்டுள்ளவாறு தனக்கு அறிவிப்பதாகவும், | அரசாங்க உத்தியோக த்தர்களுக்கான முற்பணக் கணக்கில் நிலுவைக் கடன் மீதியை அறவீடு செய்தல் | 2.6 |
| 128(1)(ச) | உத்தியோகத்தர்களின்/ ஊழியர் களின் தாமதம், கவனயீனம், தவறுகள் அல்லது மோசடியால் அரசிற்கு நட்டம் ஏற்பட்ட சந்தர்ப்பங்களில் நிதிப் பிரமாணம் 103 முதல் 108 வரையான பிரமாணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளை கணக்கீட்டு உத்தியோகத்தர் களினால் பின்பற்றப்பட்டதாகவும், நிதிப் பிரமாணம் 156(1) இன் பிரகாரம் அந்நட்டங்கள் தொடர் பாக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள்/ ஊழியர் கள் பேரில் மிகை கட்டணங்கள் விதிக்கப்படுமெனவும் (கண்காணிக்கும் பொருட்டு போதிய ஒழுங்குகள் மேற்கொள் வது அவரின் பொறுப்பாக உள்ளதெனவும்) | நட்டங்கள் மற்றும் சேதங்கள் | 2.3 |

## 2. பொருண்மையான மற்றும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 2.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) திணைக்களத்தினால் பாதைகள் அபிவிருத்தி விடயமொன்றான முதுகடுவ சொய்ஸாராம பாதையை நிர்மாணிப்பதற்காக ரூபா 7,305,000 இற்கான தொகையொன்று வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) 2016 ஆண்டின் போது ஆரம்பிப்பதற்கு திட்டமிட்டிருந்த ரூபா 16 மில்லியன்களுக்காக, லுனாவ வளைவு மற்றும் ஒழுங்கை 180 மீற்றர்களுக்கு ஜியோ பேக் ரிவர்ட்மன்ட்

அரைச் சுவர் நிர்மாணிக்கும் வேலைத்தளம் கடற்தொழில் மக்களின் எதிர்ப்பின் காரணமாக கைவிடப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது செயற்படுத்துவதற்காக முன்கொண்டு வந்திருக்கவில்லை.

(இ) 2015 ஆண்டு முதல் 2017 ஆண்டு வரை மாத்திரம் 900 அங்கீகாரம் இன்றிய நிர்மாண வேலைகள் இனங்கண்டிருந்ததுடன் அவற்றில் 793 இனை உடைத்து அகற்றுவதற்கு கட்டளை இடப்பட்டிருந்த போதிலும் 123 இனை மாத்திரமே உடைத்து அகற்றப்பட்டிருந்தது. அதாவது கட்டளை இடப்பட்டிருந்த தொகையில் 15 சதவீதம் மாத்திரமே.

## 2.2 பெறுகை செய்முறைகளை செயற்படுத்துதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பெறுகை வழிகாட்டல் கோவையின் 8.12.2 வழிகாட்டலின் பிரகாரம் இணங்கியிருக்கும், விதிக்கப்பட்டவைகள், நிபந்தனைகளின் பிரகாரம் வேலைகள் நிறைவேற்றப்பட்டுள்ளன என சான்றுபடுத்தியிருந்த கொடுப்பனவுகள், ஒப்பந்த வேலையில் நிபந்தனைகளுக்கு இணங்கியிருந்தன என உறுதிப்படுத்தி பொறியியலாளரினால் வேலை பூர்த்தி செய்யப்பட்டதற்கான சான்றிதழ் வழங்கப்பட வேண்டுமெனிறும் வெலிகம கடலோர பூங்கா நிர்மாணித்தல், கல்பிடிய கடலோர சுற்றாடல்சார் நிலையம் நிர்மாணித்தல், முதுபந்திய வளைவு நிர்மாணித்தல் தொடர்பாக அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2006 பெறுகை வழிகாட்டல் கோவையின் 5.4.8(அ) மற்றும் 5.4.9 வழிகாட்டல்களின் பிரகாரம் ரூபா 2 மில்லியனை விட கூடிய பெறுமதியுடைய வேலைகளுக்காக செயலாற்றல் பிணை முறியொன்று பெற்றுக்கொள்ள வேண்டுமெனினும் அலை தாங்கிகள் நிர்மாணிக்கும் வேலைகளின் போது இயந்திரங்கள் மற்றும் வாகனம் வழங்கும் ஒப்பந்தக்காரர்களிடமிருந்து அவ்வாறான பாதுகாப்பு தொகையொன்று பெற்றுக்கொண்டிருக்கவில்லை.

(இ)
- (i) திணைக்களத்தினால் அலைதாங்கிகள் நிர்மாணிக்கும் போது பாரஊர்த்திகள், இயந்திர உபகரணங்கள் வழங்குதல் தொடர்பாக பெறுகை வழிகாட்டல் கோவையின் வழிகாட்டல் 8.9.1(அ) இன் பிரகாரம் ஒப்பந்த உடன்படிக்கையில் உட்பட்டிருக்காததுடன் வெலிகம கடலோர பூங்கா அபிவிருத்தி செய்தல் கட்டம் 1 இல் 2015 அக்தோபர் 12 திகதி ரூபா 13.8 மில்லியன் தொகையொன்று நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் அதற்காகவும் உடன்படிக்கை ஒன்று கையொப்பமிட்டிருக்கவில்லை.
- (ii) பெறுகை வழிகாட்டல் கோவையின் வழிகாட்டல் 8.9.1 பிரகாரம் வேலை ஆரம்பிப்பதற்கு முன்னர் இரு தரப்பினரினராலும் முறையான உடன்படிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டுமெனினும் முதுபந்திய வளைவு நிர்மாணிக்கும் போது மூலப்பொருட்கள் வழங்குவதற்கான உடன்படிக்கைகளில் அணுகும் போது தாமதித்தல் அவதானிக்கப்பட்டதுடன் வழங்கல்களை பூர்த்தி செய்யப்பட வேண்டிய திகதி முடிவடையும் வரையும் உடன்படிக்கைகளுக்கு அனுகியிருக்கவில்லை. கற்பிட்டி கடலோர சுற்றாடல் நிலையத்தின் திருத்த வேலையின் போது ஒப்பந்தவேலை ஆரம்பிக்கப்பட்டு 14 நாட்களுக்கு பின்னர் உடன்படிக்கை கையொப்பமிடப்பட்டிருந்தது. மண்டைத்தீவு ட3 அலை தாங்கிகள் நிர்மாணிக்கும் போது மூலப்பொருட்கள் வழங்குவதற்காக தெரிவுசெய்யப்பட்ட வழங்குனர்களுடன் 1 மாதம் 1½ மாதம் இடைப்பட்ட காலத்தினால் உடன்படிக்கை கையொப்பமிடல் தாமதமடைந்திருந்தது.

(ஈ) பெறுகை வழிகாட்டல் கோவையின் வழிகாட்டல் 4.3.2 இன் பிரகாரம் ஆரம்ப கிரய மதிப்பீடு, நிறுவனத் தலைவரினால் அங்கீரிக்கப்பட வேண்டுமெனினும் முது பந்திய வலைவினை நிர்மாணித்தல் மற்றும் மண்டதீவு டீ அலை தாங்கி நிர்மாணித்தல் தொடர்பாக அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(உ) பெறுகை வழிகாட்டல் கோவையின் வழிகாட்டல் 8.14.1 இன் பிரகாரம் ஏதேனும் ஒரு ஒப்பந்தவேலையின் காலநீடிப்பு மேற்கொள்ளும் போது பெறுகை நிறுவனம் திருப்தி அடையக்கூடிய விதமாக உறுதிப்படுத்தப்படும் விஷேட சந்தர்ப்பங்களுக்குரிய காரணங்களின் போது அல்லது இயற்கைப் பேரழிவுகளின் போது அது தொடர்பாக கவனம் செலுத்த முடியும். எவ்வாறாயினும் பல சந்தர்ப்பங்களில் அவ்வாறான காரணம் ஒன்று இன்றி மற்றும் திணைக்களத்தினால் குறிப்பிட்ட ஒப்பந்தக்காரரின் சிட்டைகளுக்கு உரிய விதமாக பணம் செலுத்தப்படாமையினால் முதுபந்திய வலைவு நிர்மாணிக்கும் போது திணைக்களத்தினாலேயே காலநீடிப்பு வழங்கப்பட்டிருந்தது.

(ஊ) முது பந்திய வளைவு நிர்மாணிக்கும் போது பெறுகை வழிகாட்டல் கோவையின் வழிகாட்டல் 2.5.1(அ) இன் பிரகாரம் கவனம் செலுத்தப்படும் பெறுகை செயற்பாட்டிற்காக நிதியம் பெறுவதை உறுதிப்படுத்தும் நடைமுறையொன்று காணப்படாமையால் சிட்டைகளுக்காக பணம் செலுத்துவதற்கு பணம் காணப்படவில்லை. அதன் காரணமாக விஷேட காரணங்கள் இன்றிய நான்கு சந்தர்ப்பங்களில் ஒப்பந்தக் காலத்தை நீடித்தமையால் செயற்திட்டம் 4 மாதங்களினால் தாமதமாகியிருந்தது.

(எ) பெறுகை வழிகாட்டல் கோவைக்கு 2007 அக்தோபர் 03 திகதி சேர்க்கப்பட்ட இணைப்பில் பந்தி இலக்கம் 8.13.4 இன் பிரகாரம் முரண்படும் தன்மை 10 சதவீதத்தை விட அதிகரிக்கும் போது குறிப்பிட்ட படிவத்தில் குறிப்பிட்டுள்ள காரணங்களுக்கான விளக்கமளிப்புகளுடன் பிரதான கணக்கு உத்தியோகத்தருக்கும் சமர்ப்பிப்பதன் மூலம் முரண்பாடுகளுக்காக அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டுமெனினும் கற்பிட்டி கடலோர சுற்றாடல் நிலையம் திருத்த வேலை, கொடவாய விடுமுறை விடுதி நிர்மாணித்தல், வெலிகம கடலோர பூந்தோட்டத்தில் கட்டம் 2 மற்றும் 3 அபிவிருத்தி செய்தல் ஆகிய கருமங்களின் போது அதன் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை.

## 2.3 நட்டங்கள் மற்றும் சேதங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1983 செப்தெம்பர் 02 திகதிய 260/22 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானியின் மூலம் விதிக்கப்பட்ட 1982 இன் 01 ஆம் இலக்க கடலோர பாதுகாப்பு கட்டளை மற்றும் 2012/51 ஆம் இலக்க 2017 மார்ச் 31 திகதிய அதிவிஷேட வர்த்தமானியின் மூலம் திருத்தப்பட்ட கடலோர பாதுகாப்பு கட்டளையின் பிரகாரம் கட்டணம் அறவீடு செய்வதற்காக அனுமதிப்பத்திரம் வழங்காமையால் அரசிற்கு கிடைக்க வேண்டிய ரூபா 6,831,000 இற்கான தொகை ஒன்றினை இழந்துள்ளது.

(ஆ) கொலின்ஜாடிய 80 மீற்றர் அலைதாங்கி நிர்மாணித்தல் முது பந்திய வலைவு நிர்மாணித்தல் மற்றும் மாரவில அலைதாங்கி நிர்மாணித்தல் ஆகிய ஒப்பந்த வேலைகளின் போது தெரிவு செய்யப்பட்ட வழங்குனர்களினால் இயந்திரங்கள் மற்றும் பண்டங்கள் வழங்குதலை இடையில் நிறுத்தியதன் காரணமாக இரண்டாவது விலை சமர்ப்பித்திருந்த வழங்குனரை சேவைகள் வழங்குவதற்காக தெரிவு செய்வதற்கு நேரிட்டிருந்தமையால் ரூபா 2,599,924 இற்கான நட்டமொன்று ஏற்பட்டிருந்தது.

(இ) (i) திணைக்களத்தின் கடலோர பாதுகாப்பு வேலைகள் தொடர்பாக ஒப்பந்த வேலைகளை உடன்படிக்கையின் பிரகாரம் நிறைவேற்றாமையால் அறவிடப்பட வேண்டிய தாமதக் கட்டணம் ரூபா 1,855,192 தொகையினை அறவீடு செய்திருக்கவில்லை.

(ii) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்திருந்த 2 தொன் எடையான 2 எக்ஸ்கவேடர்களை உரிய முறையில் வழங்குவதில் தாமதிக்கப்பட்டமையால் அறவிடப்பட வேண்டியிருந்த தாமதக் கட்டணம் ரூபா 3,808,200 இற்கான தொகையினை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஈ) மண்டத்தீவில் 03டீ அலை தாங்கிகள் நிர்மாணிக்கும் போது உரிய முறையில் கருங்கற்கள் வழங்குவதில் தாமதித்ததின் காரணமாக இயந்திரங்கள் மற்றும் வாகனங்களை செயற்படாதிருந்த காலத்திற்காக செலுத்தியிருந்த ரூபா 469,797 இற்கான தொகை திணைக்களத்திற்கு ஏற்பட்டிருந்த நட்டமொன்றென அவதானிக்கப்பட்டது.

## 2.4 முகாமைத்துவ பலவீனங்கள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட பலவீனங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) முறைப் பிரகாரம் மதிப்பீடு தயாரிக்கப்படாமையால் 2017 ஆண்டின் போது நிறைவேற்றப்பட்ட 8 செயற்திட்டங்களுக்காக திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்ட ஆரம்ப மதிப்பீட்டை மிகைத்து ரூபா 28.1 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அதே போல் 2017 ஆண்டின் போது நிறைவேற்றப்பட்ட 10 செயற்திட்டங்களுக்காக ஆண்டிற்கான ஒதுக்கிய ஏற்பாடுகளை மிகைத்து ரூபா 54.79 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) 2015 ஜூலை 01 திகதி முதல் கடலோர பாதுகாப்பு வழிகாட்டி ஒருவர் பொலன்னறுவை மாவட்டத்திற்காக ஜனாதிபதி கூட்டிணைப்பாளர் ஒருவர் என ஜனாதிபதி செயலகத்திற்கு விடுவிக்கப்பட்டிருந்ததுடன் 2017 திசெம்பர் 31 வரை திணைக்களத்தின் செய்பணிகள் நிறைவேற்றாமல் ரூபா 738,893 தொகை திணைக்களத்தினால் அவரது சம்பளமாக செலுத்தப்பட்டிருந்தது.

## 2.5 பணிகளை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தினால் வழங்கியிருந்த ஏற்பாடுகளை பயன்படுத்துதல்

2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டு மற்றும் முன்னைய ஆண்டின் போது திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்த ஏற்பாடுகள், பயன்படுத்தல் மற்றும் சேமிப்பு தொடர்பான தகவல்கள் மற்றும் அது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| ஆண்டு | செலவின வகை | தேறிய ஏற்பாடு | பயன்படுத்தல் | சேமிப்பு | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|---|
| | | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | |
| 2016 | மீண்டுவரும் | 219.14 | 207.61 | 11.51 | 5.2 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | மூலதன | 1,827.5 | 1,122.57 | 704.99 | 38.5 |
| | **மொத்தம்** | **2,046.64** | **1,330.11** | **716.52** | **35** |
| 2017 | மீண்டுவரும் | 218.46 | 213.42 | 5.03 | 2.3 |
| | மூலதன | 1,116.2 | 981.66 | 134.54 | 12 |
| | **மொத்தம்** | **1,334.66** | **1,195.08** | **139.58** | **10.4** |

மேற்கூறிய தரவுகள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது 02 மீண்டுவரும் செலவு விடயங்களின் கூட்டுத்தொகை ரூபா 1,562,900 தொகையினை தேறிய ஏற்பாடுகளில் ரூபா 215,139 தொகை மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்த காரணத்தினால் சேமிப்பு ரூபா 1,347,761 தொகையாகும். அந்த சேமிப்பு ஒதுக்கிய ஏற்பாடுகளின் 42 சதவீதம் முதல் 96 வரையான வீச்சில் காணப்பட்டது.

(ஆ) 05 மூலதன செலவு விடயங்களின் கூட்டுத்தொகையாகிய ரூபா 339.50 மில்லியன் இற்கான தேறிய ஏற்பாடுகளில் ரூபா 218.54 மில்லியன் தொகை மாத்திரம் பயன்படுத்தியிருந்த காரணத்தினால் சேமிப்பு ரூபா 120.96 மில்லியன் ஆகும். செலவு விடயங்களின் பிரகாரம் அந்த சேமிப்பு 24 சதவீதம் முதல் 44 சதவீதம் வரை வீச்சில் காணப்பட்டது.

(இ) 2017 ஏப்ரல் 27 திகதிய 255/2017 ஆம் இலக்க அரச கணக்கு சுற்றறிக்கையின் 02(அ) பந்திக்கு இணங்காமல் 06 செலவு விடயங்களுக்காக ஒதுக்கியிருந்த ரூபா 757 மில்லியன் ஏற்பாடுகளை மிகைத்து ரூபா 54.011 மில்லியன் இற்கான கடப்பாடுகளை ஏற்படுத்திக் கொண்டிருந்தது.

**2.6 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

திணைக்களத்திற்கான 29101 விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடி யானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடி யானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடி யானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 11.00 | 10.91 | 9.00 | 10.64 | 39.00 | 33.25 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கணக்காய்விற்கு சமர்ப்பித்திருந்த இணக்கக் கூற்றின் பிரகாரம் அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 510,614 தொகையாகக் காணப்பட்டதுடன், அந்த நிலுவை மீதி 03 மாதங்கள் முதல் 20 வருடங்கள் வரையான

காலவீச்சு கடந்திருந்த போதிலும் அந்த நிலுவைக் கடன் மீதியை அறவீடு செய்வதற்காக திணைக்களத்திற்கு முடியாதிருந்தது.

(ஆ) 3 வருடங்களுக்கும் 20 இற்கும் இடையப்பட்ட காலப் பகுதியை உடைய சேவையை விட்டுச் சென்றுள்ள நான்கு உத்தியோகத்தர்களின் கடன்மீதியின் கூட்டுத்தொகை ரூபா 363,705 தொகையாக காணப்பட்டதுடன் இந்த கடன் மீதிகள் தொடர்பாக தாபனக் கோவையின் அத்தியாயம் XXIV பிரிவு 4.5 இன் பிரகாரம் குறிப்பிட்டுள்ளவாறு அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 2.7 பொது வைப்புக் கணக்கு

திணைக்களத்தின் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பொது வைப்புக் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 35.79 மில்லியன் தொகையாகும். பொது வைப்புக் கணக்கின் காலப்பகுப்பாய்வின் பிரகாரம் ரூபா 3.93 மில்லியனிற்கான 02 வருடங்களை மிகைத்துள்ள வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு செயற்பட்டிருக்கவில்லை.

## 2.8 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மை

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள். விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்கியிருக்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்படுகின்றது.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| நியதிச்சட்ட ஏற்பாடுகள் | |
| 1981 இன் 57 ஆம் இலக்க கடலோர பாதுகாப்பு சட்டம் மற்றும் 2011 இன் 49 ஆம் இலக்க கடலோர பாதுகாப்பு (திருத்த) சட்டம் | |
| (i) பிரிவு 31(ஊ) | கடலோர பாதுகாப்பு வெகுமதி நிதியத்தியத்தின் 2017 ஆண்டிற்கான கணக்கு அறிக்கையுடன் கணக்கு தயாரிப்பதற்கான அடிப்படையாகக் கொண்ட கொள்கைகளை சமர்ப்பித்திருக்கவில்லை. |
| (ii) பிரிவு 31(3) | பணிப்பாளர் நாயகத்தினால் உடைத்து அகற்றிக்கொள்ளும் படியான கட்டளை வழங்கப்பட்டிருந்த பின்னர் அது தொடர்பாக திருப்தியடையாத நபர் ஒருவரினால் அந்த கட்டளை வழங்கப்பட்ட அறிவித்தல் ஓட்டப்பட்ட நாள் முதல் மூன்று நாட்களுக்குள் அதற்கு எதிராக, உரிய அமைச்சின் செயலாளருக்கு மேன்முறையீடு ஒன்று சமர்ப்பிக்க முடியும். எனினும், உடைத்து அகற்றுவதற்கான கட்டளை ஒட்டப்பட்டு 11 நாட்கள் முதல் 09 மாதங்கள் வரையான காலம் கடந்துள்ள 07 அங்கீகாரமற்ற நிர்மாணவேலைகள் தொடர்பாக உரிய முறையில் தொடர் நடவடிக்கை எடுத்திருக்காததுடன் அந்த அங்கீகாரமற்ற நிர்மாணவேலைகளை அகற்றுவது தொடர்பாக முறையாக செயற்படுத்துவதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (iii) | பிரிவு 31(4) | உடைத்து வீழ்த்தும் கட்டளை ஒன்று பெற்ற பின்னர் அல்லது மேன்முறையீட்டின் மீது கவனம் செலுத்திய பின்னர் அங்கீகாரம் இன்றி நிர்மாணிக்கப்பட்ட நிர்மாண வேலைகளை அகற்றுவதற்கு மேற்கொள்ளப் பட்ட மொத்த செலவுகள் மற்றும் அங்கீகாரம் இன்றி மேற்கொள்ளப்பட்ட நிர்மாண வேலைகளுக்காக பயன்படுத்தப்பட்ட அனைத்து பண்டங்களையும் அகற்றுவதற்காக மேற்கொள்ளப்படும் அனைத்து செலவுகளும் அந்த நபரிடம் அரசாங்கத்திற்கு அறவிடப்பட வேண்டிய கடன்தொகை ஒன்று என கணிக்க வேண்டும். எனினும் 2017 ஆண்டின் போது 71 அங்கீகாரமின்றிய நிர்மாண வேலைகளை உடைத்து அகற்றுவதற்கு ஏற்பட்டிருந்த ரூபா 423,200 இற்கான செலவுகளை உரிய தரப்பினரிடம் அறவீடு செய்திருக்கவில்லை. |

## 2.9 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் உள்ளபடியான பதவியணி**

2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட, உள்ளவாறான, வெற்றிட பதவியணி மீதான விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 41 | 31 | 10 |
| (ii) | மூன்றாம் நிலை | 4 | 0 | 4 |
| (iii) | இரண்டாம் நிலை | 321 | 254 | 67 |
| (iv) | ஆரம்ப நிலை | 173 | 124 | 49 |
| | மொத்தம் | 539 | 409 | 130 |